# திருவள்ளூர் நகராட்சி
## சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

திருத்திய 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை III விதி 2(1)ன் கீழ் திருவள்ளூர் நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் திருவள்ளூர் நகர் மன்ற கூடத்தில் 29.04.2020 –ம் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட முடிவு செய்யப்பட்டது.

### நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்:1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–993 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:2

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–994 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:3

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–995 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. மார்ச் 2020–ம் மாதத்தில் கீழ்கண்டவாறு பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் விபரங்கள் கணினியில் பதியப்பட்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| மார்ச் 2020 | 6 | 10 | 16 | 8 | 6 | 14 | – | – | – |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:–996 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:5**

அரசாணை (D) எண்,141 நாள்.23.4.2020 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறையின், அரசாணையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்தவேண்டிய சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் போன்ற இதர நிலுவை தொகையை அபராதம் ஏதுமின்றி மூன்று மாத காலத்திற்கு அதாவது 30.06.2020 வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ள அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் பதிவு செய்யலாம்
   (ந.க.எண்.2987 / 2018 / அ1)

**தீர்மான எண்:–997 பதிவு செய்யப்பட்டது.**